**Code No. 006**

## PRE-BOARD EXAMINATION, DECEMBER – 2019

**CLASS: IX** **TAMIL-2nd LANGUAGE** **Time: 3 HOURS**

**MAX. MARKS: 80**

---

*பிரிவு : அ - படித்தல்* - 15
*பிரிவு : ஆ -எழுதுதல்* - 14
*பிரிவு : இ -இலக்கணம்* - 15
*பிரிவு : ஈ -இலக்கியம்/தமிழ்ப்பாடநூல்* - 36

**பகுதி - அ (படித்தல்)**

1. **பின்வரும் பத்தியை படித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.** 5

சுற்றுச்சூழலை சிதைக்காமல் இயற்கைக்கு இணக்கமாக வாழ்வது, நாம் ஒவ்வொருவரும் அன்றாட வாழ்க்கையில் சிறிய மாற்றங்களை செய்வதன் மூலமும், சில செயல்களை தவிர்ப்பதன் மூலமும் நிச்சயம் மாற்றங்களை உருவாக்க முடியும்.

தினசரி காலையில் பல் துலக்கும்போது குழாயை திறந்து வைத்துக்கொண்டே, பல் துலக்குகிறோமா என்பதை கவனிக்க வேண்டும். ஒருவர் இப்படிச் செய்வதால் மட்டும் 3 லிட்டர் தண்ணீர் வீணாகிறது. உண்மையில் இந்தச் செயல்களுக்கு ஒரு கப் தண்ணீரே போதுமானது. ஷவரில் குளித்தால் அதிக நேரம் எடுத்துக் கொள்கிறோம். இதனால் தண்ணீர் வீணாகிறது. வாளியில் குளித்தால் அதைவிட குறைந்த தண்ணீரே செலவழியும்.

பழுதடைந்த குழாய்கள், பைப்புகளாலும் தண்ணீர் வீணாகும். எடுத்துக்காட்டாக, ஒரு குழாயில் இருந்து 30 சொட்டு தண்ணீர் ஒரு நிமிடத்துக்கு வெளியேறினால், ஒரு நாளைக்கு பல லிட்டர் தண்ணீர் வீணாகும். எனவே, வீட்டிலும் அலுவலகத்திலும் குழாய் பழுதடைந்து இருந்தால் உடனே அவற்றை சரிசெய்ய வேண்டும். இதை அறிய பேனாமையை கரைத்து விட்டால் தெரியும். காய்கறி, அரிசி போன்றவற்றை கழுவிய நீரை செடிகளுக்கு ஊற்றலாம். பாத்திரங்களைக் கழுவும்போது குழாயை திறந்து விட்டுக் கொண்டே கழுவுவதைவிட, ஒரு பெரிய பாத்திரத்தில் மற்ற பாத்திரங்களை தேய்த்து வைத்துக் கொண்டு, மற்றொரு பாத்திரத்தில் நிரப்பப்பட்ட நல்ல நீரில் இரண்டொரு முறை முக்கி எடுத்தால் தண்ணீர் தேவையின்றி விரயம் ஆகாது. இதையெல்லாம் செய்தாலே சாக்கடை குறைந்து சுற்றுச்சூழல் சீரடையும். வீடுதோறும் தண்ணீர் பெருமளவு மிச்சமாகும் என்கிறார்கள் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள்.

**வினாக்கள்** :

i. வீட்டிலும் அலுவலகத்திலும் குழாய் பழுதடைந்து இருந்தால் உடனே அவற்றை என்ன செய்ய வேண்டும்?
அ. சரிசெய்ய வேண்டும்

ஆ. சரிசெய்ய கூடாது

இ. சரிசெய்ய தேவையில்லை

ii. பல் துலக்கும்போது குழாயை திறந்து வைத்துக்கொண்டே, பல் துலக்கும் போது என்ன நிகழ்கிறது?

அ. 3 லிட்டர் தண்ணீர் வீணாகிறது

ஆ. தண்ணீர் வீணாகவில்லை

இ. தண்ணீர் சிக்கனமாகிறது

iii. காய்கறி, அரிசி போன்றவற்றை கழுவிய நீரை என்ன செய்யலாம்?

அ. செடிகளுக்கு ஊற்ற கூடாது

ஆ. தேவையில்லை

இ. செடிகளுக்கு ஊற்றலாம்

iv. தண்ணீர் சிக்கனத்தினால் என்ன ஏற்படும்?

அ. வெள்ளம் ஏற்படும்

ஆ. சாக்கடை குறையும்

இ. கொசு உற்பத்தியாகும்

v. தினமும் நாம் ஷவரில் குளிக்க வேண்டும்.

அ. சரி

ஆ. தவறு

இ. எதுவும் இல்லை

2. **பின்வரும் பத்தியை படித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.** **5**

கடல் நீரில் மிக அதிகளவு கரைந்துள்ள திடப்பொருள் சோடியம் குளோரைடு (சாதாரணஉப்பு) ஆகும். மேலும் இந்நீரில் மக்னீசியம், கால்சியம், பொட்டாசியம் போன்ற உப்புகளும் மேலும் பல தனிமங்களும் உள்ளன. இதில் சில குறைந்த செறிவுத் தன்மையுடன் காணப்படுகின்றன. உவர்ப்புத் தன்மை (salinity) இடத்திற்கேற்றார் போல் வெகுவாக வேறுபடுகிறது.

ஆறும் கடலும் கலக்கும் கடல் பகுதியில் உவர்ப்புத் தன்மை குறைவாகக் காணப்படுகிறது. எவ்வாறேனும், பெருங்கடல்களில் கரைந்திருக்கும் உப்புகளின் "ஒப்புமை" வீதங்கள் பொதுவாக ஒன்றாகவே இருக்கின்றன; பெரிதாக மாறுவதில்லை.

கடல் பரப்பின் மீது வீசும் காற்றினால் அலைகள் உருவாகின்றன. இவை ஆழக்குறைவான நீரை அடையும்போது கொந்தளிப்புடன் உடைந்து சிதறுகின்றன. வீசும் காற்றின் உராய்வின் மூலமாக பரப்பு நீரோட்டங்கள் உருவாகின்றன.

வைரசுகள், பாக்டீரியங்கள், புரோடிஸ்ட்கள், பாசிகள், தாவரங்கள், பூஞ்சைகள் இவற்றுடன் விலங்குகள் போன்ற பெரும் அளவிலான உயிரினங்கள் கடலில் வாழ்கின்றன. இந்த உயிரிகள் சூரியஒளி அதிகம் படும் பரப்பு நீர் முதல் சூரிய ஒளியே படாத அதிக அழுத்தத்திலும் குளிர்ச்சியிலும் இருட்டிலும் இருக்கும் அதி ஆழ நீர் வரை பரவியுள்ளன. குறுக்குக் கோடு வாக்கில் (latitude) கடலின் தன்மையும் மாறுகிறது. எடுத்துக்காட்டாக, ஆர்க்டிக் பனிக்கு அடியில் குளிர் நீரையும் வெப்ப மண்டலப் பகுதிகளில் வண்ண மயமான பவளப் பாறைகளையும் கடல் கொண்டுள்ளது. முதன்மையான பல உயிரினக் குழுக்கள் கடலில்தான் சிறந்துவந்தன (evolved). மேலும், உயிரும் கடலிலேயே தோன்றியிருக்கக்கூடும்.

**வினாக்கள்** :

i. கடல் பரப்பின் மீது வீசும் காற்றினால் __________________ உருவாகின்றன.

அ. அலைகள்
ஆ. சூரியஒளி
இ. உயிரிகள்

ii. ஆர்க்டிக் பனிக்கு அடியில் குளிர்நீரையும் வெப்பமண்டலப்பகுதிகளில் வண்ண மயமான ________________ யும் கடல் கொண்டுள்ளது.
அ. சோடியம் குளோரைடு
ஆ. பவளப் பாறைகளை
இ. கால்சியம்

iii. உயிரும் முதன்முதலில் ________________தோன்றியிருக்கக்கூடும்.
அ. கடலிலேயே
ஆ. தரையில்
இ. வானத்தில்

iv. ஆறும் கடலும் கலக்கும் கடல் பகுதியில் எதன் தன்மை குறைவாகக் காணப்படுகிறது.
அ. புளிப்பு
ஆ உவர்ப்பு
இ. இனிப்பு

v. கடல் நீரின் உவர்ப்புத் தன்மை இடத்திற்கேற்றார் போல் வெகுவாக __________ .
அ. வேறுபடவில்லை
ஆ. மாறுபடவில்லை
இ. வேறுபடுகிறது

3. **பின்வரும் பகுதியைப் படித்து, அதனை மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி எழுதுக.** **5**

### வளி மண்டலம்

நம் பூமியை சூழ்ந்துள்ள வளி மண்டலம், பல வாயுக்கலவை உடையதாகும், இதில் 79% நைட்ரஜனும் 20%, பிராணவாயுவும், 3% கரியமிலவாயுவும், சிறிதளவு பிற வாயுக்களும் உள்ளன.

### காற்று மாசுபாடு

வாயுக்களின் இந்த சமச்சீர்நிலை மாறாமல் இருக்கும் வரையில் வளி மண்டலம் எந்தவித பாதிப்பும் அடையாது. தொழில் மயமாதல், நவீனமயமாதல் முதலியவற்றால் வளி மண்டலமானது பாதிப்படைகிறது, இவை காற்று மாசு ஏற்படுத்துவதற்கு வழிவகுக்கின்றன,
இந்தியா உட்பட பல நாடுகளில் காற்று மாசுக்கேடு ஒரு நிலையான பிரச்சனையாக உள்ளது. மனித உடல்நலம் உணவு, உற்பத்தி, சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை வளங்களையும் பாதிக்கின்றன,
நாம் சுவாசிக்கும் காற்று, தொழிற்சாலை மற்றும் வாகனங்கள் வெளியிடும் புகையினால் அசுத்தப்படுத்தப்படுகின்றது, தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் நைட்ரஜன் மற்றும் கந்தக ஆக்ஸைடுகள், பெட்ரோல் சுத்திகரிப்பு ஆலைகளிலிருந்தும் வாகனகளிலிருந்தும் வெளிவரும் வீரியமிக்க ஹைட்ரோ கார்பன்கள், வாகனங்களிலிருந்து வெளிவரும் கார்பன் மோனாக்ஸைடு, தொழிற்சாலைகளிலிருந்தும், உலோகம் பிரித்தெடுக்கும் ஆலைகளிலிருந்தும் வெளிவரும் உலோகத்துகள்கள், இரசாயனத்

தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் கரிமச் சேர்மங்கள் முதலியவை காற்றை மாசுபடுத்துகின்றன.

**காற்று மாசுபாடுகளினால் ஏற்படும் விளைவுகள்**

கண் எரிச்சல், தலைவலி, தொண்டைக்கட்டு, காய்ச்சல் மற்றும் புற்றுநோய் போன்ற பல நோய்களை காற்று மாசுபாடு உண்டாக்குகிறது, தொழிற்சாலைகளும், வாகனங்களும் ஏற்படுத்தும் புகையினால் தாவரங்கள், நிலம், நீர், நினைவுச் சின்னங்கள் மற்றும் கட்டிடங்கள் முதலியவை பாதிக்கப்படுகின்றன.

**அமில மழை**

தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கந்தகம் மற்றும் நைட்ரஜன் ஆக்ஸைடு போன்ற வாயுக்களால் ஏற்படுகிற அமிலமழை, மண்ணின் அமிலத் தன்மையை அதிகப்படுத்துவது மட்டும் அல்லாமல் தாவரங்கள் இலைகளை உதிர்த்தல், குளம் மற்றும் ஆறுகளில் உள்ள நீர்வாழ் உயிரினங்கள் பாதிக்கப்படுதல் முதலிய பாதிப்புக்களும் காரணமாகிறது.

**ஓசோன் படலம்**

வாயுமண்டலத்தின் ஸ்ரடோஸ்பியரிலுள்ள ஓசோன் படலம் சூரியனிலிருந்து வருகிற ஆபத்தான புற ஊதாக்கதிர்களை தடைசெய்கிறது. அதிகவேக விமானங்கள் (சூப்பர் சானிக்) வெளியிடும் அதிகப்படியான நைட்ரஜன் ஆக்ஸைடுகளும், குளிர்சாதனப் பெட்டி, தீயணைப்பான் போன்றவற்றிலிருந்து வெளிவரும் க்ளோரோப்ஃபளோரோ கார்பன்களும் ஓசோன் படலத்தை சிதைக்கிறது. இதன் விளைவாக மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் தோல் புற்றுநோய் ஏற்படுகிறது.

**வாகனங்கள் - காற்று மாசுகேட்டின் முக்கிய காரணிகள்**

மனிதனின் கண்டுபிடிப்பான வாகனங்கள் நம்மிடம் உள்ள எண்ணெய் சேமிப்பை குறைத்து வாகனங்களிலிருந்து வெளிவரும் புகை (கார்பன் மோனா ஆக்ஸைடு) (நைட்ரஜன்) ஆக்ஸைட்டு மற்றும் பிற வாயுகள் காற்றை மாசுப்படுத்திகிறது. இவை, சூரிய கதிர்களுடன் இணைந்து ஒளிவேதி நச்சுப்புகை படலத்தை ஏற்படுத்துகிறது, இது நகரங்களில் பெரிதும் பாதிக்கின்றன.

தொழிற்சாலை மற்றும் வாகனங்களில் இருந்து வெளியேறும் வாயுக்களோ வளிமண்டலத்தில் அமிலத்தன்மையை ஏற்படுத்துக்கின்றது. இது அமில மழையாக உற்பத்தியாகிறது. இதனால் நிலத்தடி நீர் மாசுடைகின்றது.

## <u>பகுதி - ஆ எழுதுதல்</u>

3. உலகத் தாய்மொழி நாள் கொண்டாடுவதற்காக உங்கள் பள்ளிக்கு வரும் தமிழ் அறிஞருக்கு வரவேற்பு கடிதம் எழுதுக. 6

(அல்லது)

தேவையற்ற இறைச்சலைக் குறைக்கக் கோரி மாசு கட்டுப்பாட்டு ஆணையருக்கு கடிதம் ஒன்று எழுதுக.

**4. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒரு பகுதியின் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.** 8

அ) நீரின்றி இயங்காது உலகு - நீரின் இன்றியமையாமை - நீர்ப் பற்றாக்குறை ஏற்படக் காரணம் - நீரைச் சேமித்தல் - நிலத்தடி நீர் மட்டம்.

**(அல்லது)**

ஆ) அறவியல் இயந்திரங்கள் - வியத்தகு சாதனைகள் - அவசியம் - பயன்பாடு - நன்மைகள் - தீமைகள் - விழிப்புணர்வு.

## பகுதி - இ (இலக்கணம்)

5. **சான்று தருக. (எவையேனும் மூன்றனுக்கு விடையளி)** 3

i. கனகாம்பரம் பூத்தது - இத்தொடரில் 'பூத்தது' என்பது?

அ. வினாத்தொடர் ஆ. விளித்தொடர்

இ. எழுவாய் ஈ. பயனிலை

ii. நிலை மொழி ஈற்றில் இ, ஈ, ஐ வரும் போது இடம்பெறும் உடம்படுமெய் ________ .

அ. யகர உடம்படுமெய் ஆ. வகர உடம்படுமெய்

இ. இரண்டும் வரும் ஈ. இரண்டும் வராது

iii. புத்தகம் மேசையில் இருக்கிறது -இத்தொடரில் உள்ள வினையடி?

அ. புத்தகம் ஆ. மேசை

இ. இரு ஈ. கிறது

iv. நான் நன்றாக பேசினேன் - என்பது எவ்வகைத்தொடர் ?

அ. தன்வினைத் தொடர் ஆ. பிறவினைத் தொடர்

இ. செய்வினை தொடர் ஈ.செயப்பாட்டு வினைத்தொடர்

6 **நிரப்புக:** 3

i. வினைச்சொற்களை அமைப்பின் அடிப்படையில் __________, __________ என இருவகைப்படுத்தலாம்.

ii. மரவேர் என்பது ___________ புணர்ச்சி எனப்படும்.

iii. பிறர்நாணத் - சீர் பிரித்து எழுதுக.

iv. இருபெயரொட்டுப் பண்புத்தொகையில் வல்லினம் _________ .

7. **கூறியவாறு செய்க:** 3

i. படி - தன்வினைத் தொடராக மாற்றுக.

ii. இயங்கு - செயப்பாட்டு வினையாக மாற்றுக.

iii. உயரம் - உணர்ச்சித் தொடராக மாற்றுக.

8. **இலக்கணக்குறிப்பு:** 3

i. விரிமலர் -

ii. ஏந்தி -

iii. பூக்கும் - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

iv. கொள்வார் - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

9. **சரியான தொடரைத் தேர்வு செய்க.** 3

i. பின்வரும் கூற்றுகளில் எது சரி ?

அ. **அ, இ -** என்னும் சுட்டெழுத்தின் பின் வல்லினம் மிகும்.

ஆ. **அந்த, இந்த** - என்னும் சுட்டுப்பெயர்களின் பின் வல்லினம் மிகாது.

இ. **எ** - என்னும் வல்லெழுத்தின் பின் வல்லினம் மிகாது.

ஈ. **எந்த** - என்னும் வினாச்சொல்லின் பின் வல்லினம் மிகாது.

ii. யாப்பிலக்கண அடிப்படையில் எழுத்து வகை அல்லாதது எது?

அ. குறில் ஆ. நெடில் இ. ஒற்று ஈ. முதலெழுத்து

iii. எழுவாய்த் தொடரில் வல்லினம் மிகாது என்பதற்கான சரியான கூற்று?

அ. குதிரை தாண்டியது ஆ. வாழ்க தமிழ்

இ. குடி தண்ணீர் ஈ. வந்த சிரிப்பு

iv. அடி _______ வகைப்படும்.

அ. 5 ஆ. 7

இ. 4 ஈ. 10

## பகுதி - ஈ பாடநூல்

10. **பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்து அதன் அடியிற் காணும் வினாக்களுக்கு விடை தருக.** 5

பல்லவர் காலத்தில் சுதையினாலும், கருங்கற்களினாலும் சிற்பங்கள் அமைக்கப்பட்டன. கோவில் தூண்கள் சிற்பங்களால் அழகு பெற்றன. தூண்களில் யாளி, சிங்கம், தாமரை மலர், நுட்பமான வேலைப்பாடுகள் நிறைந்த வட்டங்கள் போன்றவை பொறிக்கப்பட்டன. பல்லவர் காலத்தில் அமைக்கப்பட்ட கோவில்களின் கட்டடங்கள், கற்றூண்கள், சுற்றுச்சுவர்கள், நுழைவு வாயில்கள் என அனைத்து இடங்களிலும் சிற்பங்கள் மிளிர்வதைக் காண முடியும்.

பல்லவர் காலச் சிற்பக்கலைக்கு மாமல்லபுரச் சிற்பங்கள் மிகச் சிறந்த சான்றுகளாகும். கடற்கரையில் காணப்பட்ட பெரும் பாறைகளைச் செதுக்கிப் பற்பல உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அங்கு உருவாக்கப்பட்ட பஞ்ச பாண்டவர் இரதங்களில் அழகிய சிற்பங்கள் காணப்படுகின்றன. பறவைகள், விலங்குகள் ஆகியவற்றின் பல்வேறு உருவச் சிற்பங்களும் பல்லவர்களின் சிற்பக்கலைப் பெருமையை உலகுக்கு உணர்த்துகின்றன. காஞ்சி கயிலாசநாதர் கோவில் சுற்றுச்சுவர் சிற்பங்களின் கலைக்கூடமாகத் திகழ்கிறது.

**வினாக்கள்**:

i. பல்லவர் காலச் சிற்பக்கலைக்கு ________________ மிகச் சிறந்த சான்றுகளாகும்?

அ. மலைக்கோவில் சிற்பங்கள் ஆ. மலைக் குன்றுகள்

இ மாமல்லபுரச் சிற்பங்கள் ஈ. குடைவரைக் கோயில்கள்

ii. பல்லவர்களின் சிற்பக்கலைப் பெருமைக்கு ________, ____________ உருவச் சிற்பங்களும் சான்று?

அ. அருவி, ஆறு ஆ. பறவைகள், விலங்குகள்

இ. அருவி, காட்டாறு ஈ. ஆறு, விலங்குகள்

iii. சுதை என்பதற்கு பொருள் யாது?

அ. சுண்ணாம்பு ஆ. அரசு

இ. சுவர் ஈ. குவிக்

iv. கடற்கரையில் காணப்பட்ட பெரும் _____________ செதுக்கிப் பற்பல உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அ. மணல் போக்கிகளை ஆ. தடுப்பணைகளை

இ. பாறைகளை ஈ. கிணறுகளை

v. __________ கோவில் சுற்றுச்சுவர் சிற்பங்களின் கலைக்கூடமாகத் திகழ்கிறது.

அ. காஞ்சி கயிலாசநாதர் ஆ. காஞ்சி விஸ்வநாதர்

இ. காஞ்சி காமாட்சி ஈ. காஞ்சி மாரியம்மன்

11. **பின்வரும் செய்யுள் பகுதியைப் படித்து அதன் அடியிற் காணும் வினாக்களுக்கு விடை தருக.** 4

அள்ளல் பழனத்து அரக்காம்பல் வாயவிழ
வெள்ளம்தீப் பட்ட(து) எனவவெரீ இப்பு ள்ளினம்தம்
கைச்சிறகால் பார்ப்பொடுக்கும் கவ்வை உடைத்தாரோ
நச்சிலைவேல் கோக்கோதை நாடு.

---------------------------------------------------------

**வினாக்கள்**:

i. அள்ளல் என்பதின் பொருள் யாது?
ii. இப்பாடலில் அமைந்துள்ள பா வகை யாது?
iii. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் யாது?
iv. அஞ்சி - இலக்கணக் குறிப்பு தருக?

12. **பின்வரும் குறட்பாக்களைச் சரியான சீர்களால் நிரப்புக.** 2

i. அடுக்கிய கோடி பெறினும் ____________________
குன்றுவ செய்தல் ___________ .
ii. ______________________ ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொ(டு)
___________ஊன்றிய தூண்

13. **எவையேனும் இரண்டு செய்யுள் வினாக்களுக்கு விடையளி.** 8

i. குடும்ப விளக்கு நூலில் தலைவி பேச்சில் வெளிப்படும் பெண்கல்விக்கான கருத்துகளை இன்றைய சூழலுடன் ஒப்பிட்டு எழுதுக?

ii. இராவண காவியத்தில் உங்களை ஈர்த்த இயற்கை எழில் காட்சிகளை விவரிக்க ?

iii. சேர, சோழ, பாண்டிய நாட்டு வளங்களை முத்தொள்ளாயிரம் வழி விளக்குக.

14. **எவையேனும் இரண்டு உரைநடை வினாக்களுக்கு விடையளி.** 10

i. ஏறு தழுவுதல் தமிழரின் அறச்செயல் என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விவரி ?
ii. நாயக்கர் காலச் சிற்பங்களின் நுட்பங்கள் யாவை?

iii. நீங்கள் அறிந்த சாதனைப் பெண்கள் குறித்து செய்திகளை எழுதுக.

15. **ஏதேனும் ஒன்றைப் பற்றி துணைப்பாடம் எழுதுக.** 7

அ. தண்ணீர் கதையை கருப்பொருள் குன்றாமல் சுருக்கி வரைக.

(அல்லது)

ஆ. நூலகம், நூல்கள் ஆகியன குறித்து அண்ணாவின் வானொலி உரையில் வெளிப்படுகின்ற கருத்துகள் யாவை?

~~<><>~~